THE SUDAR OLI

# சுடர் ஒளி

Registered as Newspaper

01.06.2020 திங்கட்கிழமை

## இரண்டாம் அலையில் அவதானம் அவசியம்

கொழும்பு, ஜூன் 1
நாட்டில் இரண்டாம் கட்ட கொரோனா வைரஸ் தாக்கம் உருவாவதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் பொது

2

## நெல்லியடி சந்தைக்கு சீல்!

யாழ்ப்பாணம், ஜூன் 1
நெல்லியடி பொதுச் சந்தைக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் சீல் வைக்கப்பட்டுள்ளது. கொரோனா

2

## உறவுகளைத் தேடி 1,200 நாள்கள் தவம்

வவுனியா, ஜூன் 1
வவுனியாவில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் இன்று திங்கட்கிழமையுடன் ஆயிரத்து 200 நாள்களை

2

### தேர்தல் வர்த்தமானிக்கு எதிரான

# மனுக்கள் ஏற்கப்படுமா? நீதிமன்ற முடிவு நாளை



கொழும்பு, ஜூன் 1
2020 பொதுத்தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தையும் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்த தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யக்கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8 அடிப்படை உரிமை மனுக்கள் மற்றும் 13 இடையீட்டு மனுக்கள் மீதான கட்டளை நாளை மாலை 3 மணிக்கு உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படவுள்ளது.

2

## தேர்தலைப் பிற்போடுவது ஜனநாயக விரோதமானது



கொழும்பு, ஜூன் 1
பொதுத்தேர்தல் நடைபெறுவதை ஒத்திவைப்பது நாட்டின் ஜனநாயக கலாசாரத்தின் மீதான தாக்குதல் என்று சிறீலங்கா பொது மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.
நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அந்தக் கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த நடவ

2

## கட்டுநாயக்கவில் பி.சி.ஆர் சோதனை!

கொழும்பு, ஜூன் 1
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வரும் அனைத் துப் பயணிகளுக்கும் விமான

2

## பூதாகரமாகியது கலவரம் பதுக்குகுழிக்குள் ட்ரம்ப்!

வொஷிங்டன், ஜூன் 1
அமெரிக்காவில் பொலிஸாரின் சித்திரவதை காரணமாக கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் என்பவர் உயிரிழந்ததை அடுத்து, அமெரிக்காவெங்கும் கலவரம் வெடித்துள்ளது. இதையடுத்து அதிபர் ட்ரம்ப் வெள்ளை மாளிகையின் பதுங்குகுழிக்குள் அவரது பாதுகாப்

2

## தொண்டமானின் இறுதி ஊர்வலத்தில் தேர்தல் விதிமீறல்!

### ஆணைக்குழு பரிசீலனை

கொழும்பு, ஜூன் 1
ஆறுமுகன் தொண்டமானின் இறுதி ஊர்வலத்தில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன என்று எம்மிடம் முறைப்பாடு

2

## சங்கானை மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தியதாக மூவர் கைது

கொழும்பு, ஜூன் 1
யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச மருத்துவமனைக்குள் நேற்று புகுந்து தாக்குதல் நடத்தினர் என்ற சந்தேகத்தில் மூன்று சந்தேக நபர்கள் மானிப்பாய் பொலிஸாரால்

2A

## புதினம் தெரியுமோ?

கொரோனாக் காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைவதற்காக தன்னார்வலர்கள் பலரும் தாமாகவே முன்வந்து நிவாரணங்களை வழங்கியிருந்தனர். அதுவும் அரச உதவிகளை விடவும் இம்முறை தனியாரின் உதவிகளே அதிகமென்று புள்ளிவிபரங்களே

2A

## 811 பேர் குணமடைவு 811 பேர் சிகிச்சையில்

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 10 பேர் குணமடைந்துள்ளனர். இதையடுத்து தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை

2

## கொரோனா காவு 11 ஆக அதிகரிப்பு

### குவைத்திலிருந்து வந்த குடும்பஸ்தரே மரணம்

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆண் ஒருவர் இன்று உயிரிழந்துள்ளார்.

2

### ஆண்டின் இறுதியில்

## 8.6 கோடி சிறுவர்கள் வறுமைக்குள் சிக்குவர்

கொழும்பு, ஜூன் 1
கொரோனா தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு இறுதியில் மேலும் 8.6 கோடி சிறுவர்கள் உலக அளவில் வறுமையின் பிடிக்குள் தள்ளப்படுவர்

2

## ஐக்கிய மக்கள் சக்தி மீது கொத்தணிக் குண்டாம்!

கொழும்பு, ஜூன் 1
அரசாங்கமும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஐக்கிய மக்கள் சக்திமீது கொத்தணிக் குண்டு தாக்குதலை நடத்துவதாக சஜித் ஆதரவு அணி உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே

2

# மனுக்கள்...

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியர சர்களான, விஜித் மலல்கொட, புவனேக அலுவிஹார, சிசிர டி ஆப்று மற்றும் பிரியந்த ஜயவர்தன ஆகியோர் கொண்ட நீதியர சர்கள் குழாம் முன்பே இம் மனுக்கள் விசாரிக்கப்படுகின்றன. மனுதாரர்கள், எதிர் மனுதாரர்கள், இடைபுகு மனுதாரர்கள் ஆகியோரின் சமர்ப்பணங்கள் இன்று நிறைவடைந்தன. இதையடுத்தே மேற்குறித்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா இல்லையா என்பது தொடர்பான கட்டளை நாளை மாலை 3 மணிக்கு வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தேர்தலைப் பிற்போடுவது...

டிக்கை தவறான முன்னுதாரணத்துக்கு வழிவகுக்கும் என கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல்களை நடத்துவதற்கான பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மட்டுமே உள்ளது. நாட்டின் அரசியலமைப்பில் மக்களின் நம்பிக்கையும் மரியாதையும் படிப்படியாக குறைந்து வருகின்றது. நாடாளுமன்றத்தின் தேவை குறித்து சமூகத்தில் சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன அத்தகைய கருத்து கடுமையான சேதத்தை ஏற்படுத்தக்கூடும் என்றார். (ம)

# இரண்டாம் அலையில்...

மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது முக்கியம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.
நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் கொரோனா வைரஸ் தொற்று இரண்டாவது அலை உருவாகலாம் என்றும் அதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அரச அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

# இறுதி ஊர்வலத்தில்...

பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் எம்மால் தனித்து ஆராய முடியாதென்பதால் ஆணைக்குழுவின் இதர உறுப்பினர்களுடன் ஆராயவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

# கட்டுநாயக்கவில்...

நிலைய வளாகத்துக்குள்ளேயே பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் அறிவுறுத்தியிருந்தார்.
அதற்கமைய கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மத்திய நிலையமொன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.
இந்த நிலையில், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் இன்று முதல் மீளத் திறக்கப்பட்டுள்ளமையினால், பி.சி.ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)

# உறவுகளைத் தேடி 1,200...

எட்டியது.
இதனை முன்னிட்டு போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக இன்று மதியம் 12.15 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
"எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், ஓமந்தையில் கையளிக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே?" போன்ற பல்வேறான கோசங்களை எழுப்பியவாறு தனிநபர் இடைவெளியைப் பேணி போராட்டத்தில் ஈடுபட்டனர்.
போராட்டக்காரர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரிட்டன் கொடிகளையும் ஏந்தியவாறு, "சிங்கள மக்களுடன் வாழ பாக்கியம் பெற்றவர்கள் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க அருகதையற்றவர்கள்" என்ற வாசகம் தாங்கிய பதாகையுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர். (க-110)

# நெல்லியடி சந்தைக்கு...

பரவலுக்கு ஏதுநிலை இருந்தது என்ற காரணத்தின் அடிப்படையிலேயே சந்தைக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.
கொரோனா 'லொக்டவுன்' அறிவிப்பின் பின்னர் இன்றுதான் யாழ்ப்பாணத்தில் சந்தைகள் திறக்கப்பட்டன. முகக் கவசங்கள், தனிநபர் இடைவெளி என்பன மட்டில் இறுக்கமான நடவடிக்கை பின்பற்றப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.
எனினும் குறித்த சந்தையில் விற்பனையாளர்கள் சிலர் முகக் கவசங்களை மூக்கிற்குக் கீழே இழுத்துவிட்டபடி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதையடுத்தே பிற்பகல் 2 மணியளவில் சந்தைக்கு சீல் வைக்கப்பட்டது. (ம)

# 8.6 கோடி

என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.
கொரோனாவால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து யுனிசெப் மற்றும் சிறுவர்களைப் பாதுகாப்போம் என்ற அமைப்பும் இணைந்து மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிவந்துள்ளது.
குறிப்பிடப்பட்டுள்ள வீதம் வழமையை விட 15 சதவீத அதிகமாகும். பொருளாதார நெருக்கடியில் இருந்து குடும்பங்கள் உடனடியாக பாதுகாக்கப்படாவிட்டால், குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் தேசிய வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் சிறுவர்களின் எண்ணிக்கை 67.2 கோடியாக அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# 811 பேர் குணமடைவு

811 ஆக அதிகரித்துள்ளது.
நேற்று புதிய தொற்றாளர்களாக 13 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் 7 பேர் ரஷ்யாவிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எனவும், 2 பேர் பங்களாதேஷிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எனவும், 4 பேர் கடற்படையினர் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 798 பேர் அடங்குகின்றனர். அதில் 762 பேர் கடற்படையினராவர். அவர்களில் இதுவரை 405 பேர் குணமடைந்துள்ளனர்.
இதேவேளை, வெளிநாட்டுப் பிரஜைகள் 3 பேர் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து வந்த 524 பேர் இதுவரை கொரோனாவுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸால் இதுவரை பாதிப்படைந்த 1,633 பேரில் தற்போது 811 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே மேலும் 65 பேர் மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (எ-22)

# பூதாகரமாகியது கலவரம்...

புப் பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.
நேற்றுமுதல் வெள்ளை மாளிகைக்குள் உள்நுழைவதற்கு போராட்டக்காரர்கள் கடும் முனைப்புக் காட்டுகின்றனர். இன்று அவர்கள் வெள்ளைமாளிகையை முற்றுகையிட்டுள்ளனர். இதையடுத்தே ட்ரம்ப் பதுங்கு குழிக்குள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ம)

# கொரோனா காவு...

கொரோனாவால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது. அண்மையில் குவைத்திலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 45 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த குறித்த நபர் நோய்த்தொற்று தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் இன்று காலை உயிரிழந்துள்ளார் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார். இவருடன் சேர்த்து இலங்கையில் கொரோனாத் தொற்றால் 8 ஆண்களும், 3 பெண்களும் இதுவரை உயிரிழந்துள்ளனர். (எ22)

# ஐக்கிய மக்கள் சக்தி மீது...

அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் இன்று மொட்டுக் கட்சியின் விசுவாசிகளாக மாறிவிட்டனர். எனவேதான் அரசாங்கத்தை விமர்சிப்பதைவிடுத்து, அவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்கும் கனவில் 'டீல்' அரசியல் செய்கின்றனர். அரசாங்கம் பல தவறுகளை இழைத்துவருகின்றது. மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர். இந்நிலையில் அரசாங்கத்தின் குறைகளை மூடிமறைத்து மக்களைத் திசைதிருப்புவ தற்காகவே எம்மை கட்சியில் இருந்து நீக்கும் முடிவை ரணில் குழுவினர் எடுத்துள்ளனர். அவர்களை ஐக்கிய தேசியக்கட்சியினர் எனக் கூறமுடியாது. ஏனெனில் எமது பக்கமே தூய்மையான ஐ.தே.க. உறுப்பினர்கள் இருக்கின்றனர். எமது கூட்டணிமீது பயம்வந்துவிட்டது.
இதன் காரணமாகவே சிறி கொத்தவில் இருந்தும், மொட்டுக் கட்சியில் இருந்தும் ஐக்கிய மக்கள் சக்தி மீது கொத்தணிக் குண்டுகள் உட்பட அனைத்துவிதமான குண்டுத் தாக்குதல்களும் நடத்தப்படுகின்றன.
எதுஎப்படியிருந்தாலும் பொதுத் தேர்தலில் நாம் வெற்றிபெறுவோம். சஜித்மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது - என்றார். (ப-44)

## புதினம் தெரியுமோ?

கூறுமளவுக்கு இந்த உதவிகள் பல திசைகளில் இருந்தும் கிடைத்திருந்தன.
இருப்பினும் இந்த நிவாரணத்தை வைத்து சிலர் 'படம்' போடவும் தவறவில்லை. அப்படிப்பட்டவர்களில் ஒருவர் வடக்கின் கல்வி வலயமொன்றின் பணிப்பாளர். ஏற்கனவே சர்ச்சைகளுக்குப் பேர் போன இந்தப் பணிப்பாளரின் உறவினர் ஒருவரின் அந்தியேட்டிக் கிரியை நினைவாக அவரின் புலம்பெயர் தேச உறவுகளாக ஒருதொகைப் பணம் குறித்த பணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டு, அதனை ஏழை, எளிய மக்களுக்கு பயனுள்ள உதவிப்பொருள் களை வழங்குமாறு கோரினர். உடனேயே காரை எடுத்துக் கொண்டு புறப்பட்ட கல்விப்பணிப்பாளர் ஒரு சில குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கி, படம் எடுத்து, அதனை ஊட கங்களிலும் பிரசுரிக்கச் செய்தார்.
கூடவே 'உதவி தேவையானோர் தனது தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொண்டால் அவர்களுக்கும் தேவை யான உதவிகளை வழங்கத் தயார்' என்று அறிவிப்பு வேறு செய்தி ருந்தார். அதனை நம்பி ஊடகங்களில் வெளியான அவரது தொலைபேசி இலக்கத்துக்கு உதவிகோரி பலரும் அழைப்புக்களை எடுத்தபோது அந்தப் பணிப்பாளர் குறித்த அழைப்புக்களை ஏற்கவேயில்லை. தப்பித்தவறி அவர் சில அழைப்புக்களுக்குப் பதிலளித்தபோது 'உங்க ஒண்டு, ரண்டு குடும்பங்கள் தானே உதவியில்லாம இருக்கு. நிறையக் குடும்பம் எண்டா வந்து உதவி செய்யலாம். இப்பிடி ஒண்டிரண்டு குடும்பத்துக்கு உதவி செய்ய வந்து போகக் கட்டுப்படியாகாது' என்று தட்டிக்கழித்துள்ளார்.
இப்படி, அடுத்த வீட்டுத் தேங்காயை எடுத்து பிள்ளையாருக்கு சிதறு தேங்காய் அடித்துவிட்டு, அதனை வைத்து விளம்பரம் செய்வதோடு மட்டுமல்லாமல், ஏழை, எளியவர்களை ஏமாற்றவும் செய்யவும் இது போன்ற பிரகிருதிகளை என்னவென்று அழைக்கலாம்?

# தாக்குதல் நடத்தியதாக...

இன்று கைதுசெய்யப்பட்டனர்.
மருத்துவமனைக்குள் நேற்றுமாலை சிலர் உள்நுழைந்து அங்கு பணியாற்றும் ஊழியர் கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.
விபத்தில் காயமடைந்ததாக தெரிவித்து மூன்று மோட்டார் சைக்கிளில் 4 பேர் வைத்தியசாலைக்குள் உள்நுழைந்துள்ளனர்.
இதன்போது பாதுகாப்பு அலுவலர் கொரோனா நிலைமை காரணமாக காயப் பட்டவருடன் எல்லோரும் உள்ளே சிகிச் சைக்கு அழைத்துச் செல்ல முடியாது என்று தெரிவித்துள்ளார். இந்த விடயம் வாக்குவா தமாக மாறி, பின்னர் அந்தக் குழுவால் பாதுகாப்பு அலுவலரும், மருத்துவமனை ஊழியர் ஒருவரும் தாக்குதலுக்கு உள்ளாக் கப்பட்டுள்ளனர். இதையடுத்தே மூன்று சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ள னர். (ம-7)

# திருமண மற்றும் வரவேற்புபசார மண்டபங்களுக்கான அறிவித்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 1
திருமண, வரவேற்புபசார மண்டபங் கள் மற்றும் விருந்தினர் விடுதிகளுக்கான கொரோனா சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் சிறப்பு அறிவித்தல்களை விடுத்துள்ளது.
இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
குறித்த இடப்பரப்பினுள் அனுமதிக்கப்ப டக் கூடிய ஆகக் கூடிய பங்குபற்றுநர் தொடர்பான தகவல், பின்பற்றப் படவேண் டிய சுகாதார நடைமுறைகள் மண்டப வாயிலில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
நடைபாதைகள், ஆசனங்கள், அலங்கார அமைப்புகள் மற்றும் ஏனைய நோக்கங்க ளுக்கான இட ஒதுக்கீடுகளைக் கருத்திற் கொண்டு மண்டபத்தின் இடப்பரப்பிற்கு ஏற்ற வகையில் ஆசனங்களின் அனைத்துப் பக்கங்களிலும் ஒரு மீற்றர் தனிநபர் இடை வெளியைப் பேணக்கூடிய வகையில் அனுமதிக்கக் கூடிய விருந்தினர்களின் எண்ணிக்கை முகாமைத்துவத்தினரால் தீர்மானிக்கப்பட வேண்டும்.
எந்தவொரு மண்டபத்திலும் ஆகக் கூடியது 100 பங்குபற்றுனர்கள் மாத்திரமே அனும திக்கப்பட முடியும். நிகழ்விற்கு அழைப்பு விடுக்கப்பட்ட எவரேனும் சுகவீனமாக உணர்ந்தால் நிகழ்வில் பங்குபற்றுவதை தவிர்ப்பதை உறுதிப்படுத்துவது நிகழ்வின் ஏற்பாட்டாளரின் பொறுப்பாகும்.
மண்டபத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அதாவது வரவேற்பு பகுதி, நிகழ்வு நடை பெறுமிடம், உணவு பரிமாறுமிடம் போன்ற அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து இருக்கை ஒழுங்கமைப்புகளி லும் ஆசனங்களின் அனைத்துப் பக்கங்களி லும் ஒரு மீற்றர் தனிநபர் இடைவெளி பின்பற்றப்படுவது கட்டாயமாகும்.
மண்டபத்தினுள் சிறந்த காற்றோட்ட வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். வளிச் சீராக்கி பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் போதுமான புதிய காற்று வெளியிருந்து உள்வாங்கப் படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.
கைகளைச் சரியான முறையில் சவர்க்கார மிட்டுக் கழுவுவதற்கான வசதி மண்டபத் தின் நுழைவாயிலில் பொருத்தமான இடத் தில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படும் இடத் தில் கைகளை தொற்று நீக்கம் செய்து கொள்வதற்கு இலகுவாக கிடைக்கக்கூடிய வகையில் பொருத்தமான பல இடங்களி லும் கை தூய்மையாக்கிகள் இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
உணவு பரிமாறும் பகுதியில் உணவு வகை கள் அதற்கென நியமிக்கப்பட்ட பணியாள ரால் மாத்திரம் பரிமாறப்பட வேண்டும்.
சுயமான உணவுப் பரிமாறுதல் அனுமதிக் கப்படக் கூடாது. பாதுகாப்பான குடிநீர் மற்றும் பானங்கள் ஒவ்வொருவருக்கும் அதற்கென நியமிக்கப்பட்ட பணியாளரால் மாத்திரம் வழங்கப்பட வேண்டும். குடிநீர், பானங்களை வழங்க சூழலுக்குப் பாதிப் பற்ற கடதாசிக் கோப்பைகள் பாவிப்பது வரவேற்கத்தக்கது.
நிகழ்வு ஒன்றுக்காக ஒருவர் மண்டபத்தைப் பதிவுசெய்ய வரும் போது தற்போது நடைமுறைப்படுத்தப் படுகின்ற சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய பிரசுரம் கட்டாயமாக சேவை பெறுநருக்கு வழங்கப் படவேண்டும்.
நிகழ்வில் கலந்து கொள்ளுகின்ற அனைவ ரும் சரியான முறையில் முகக் கவசத்தை அணிந்திருப்பது உறுதிப்படுத்தப்பட வேண் டும்.
நடன மற்றும் இசை நிகழ்வுகளில் தனிநபர் இடைவெளி பேணப்படும் வாய்ப்புகள் குறைவென்பதால் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளவும். எந்தவொரு நிகழ்விலும் மதுபானம், புகைப்பொருள் பாவனை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். சுகா தார, பாதுகாப்பு நடைமுறைகளுக்கு பொறுப்பாக பணியாளரொருவர் நியமிக்கப்படுவதுடன் நிகழ்வுகளின் முன் னாயத்தம் முதல் இறுதி வரை சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் உரிய முறை யில் பின்பற்றப்படுவது கண்காணித்து உறுதி செய்யப்பட வேண்டும்.
கொரோனா பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டல்கள் நிகழ்வின் ஆரம்பத்திலும்; நிகழ்வு நடைபெறும் போதும் ஒலிபரப்பப்பட வேண்டும்.
நிகழ்வு நிறைவடைந்ததும் மண்டபத்தின் அனைத்துப் பகுதிகள், தளபாடங்கள், பாவனைப் பொருட்கள் சுத்தம் செய்யப் பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட வேண் டும்.
கொரோனா தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்று வதை உறுதிப்படுத்தும் விண்ணப்பம் மண்டபத்தின் உரிமையாளரால் பூர ணப்ப டுத்தப்பட்டு பகுதிக்குரிய உள்ளூராட்சி அதிகார சபைக்கும், பிரதியொன்று பகுதிக் குரிய சுகாதார மருத்துவ அதிகாரிக்கும் சமர்பிக்கப்படுவதுடன் தற்போது நடை முறையிலுள்ள அனைத்து நடைமுறைகள் தொடர்பில் மண்டபத்தின் உரிமையாளரே பொறுப்புக் கூறவேண்டியவராவார், என்றுள்ளது. (ஓ,5)

# 754 படையினருக்கு கொரோனா தொற்று

## 411 பேர் குணமடைவு



கொழும்பு, ஜூன் 1
கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளான இராணுவத்தின ரின் எண்ணிக்கை 754 ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 411 பேர் முழுமையாக குணமடைந்துள்ளனர். 348 இராணுவ வீரர்கள் தொடர்ந் தும் சிகிச்சைபெற்று வருகின்ற னர். இவ்வாறு இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகே டியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இராணுவத்தினரால் செயற்படுத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 58 பேர் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பதற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரையில் (நேற்று திங்கட்கிழமை வரை) முப்படையினரால் செயற்படுத்தப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலை யங்களில் இருந்து 11 ஆயிரத்து 488 பேர் தனிமைப்ப டுத்தலை நிறைவுசெய்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.
அதேவேளை முப்படையின் கண்காணிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 44 தனி மைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 5 ஆயிரத்து 108 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா தொற்றுக்குள்ளான 4 கடற்படை வீரர் கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படை வீரர்கள் எண்ணிக்கை 754 ஆகும். இவர்களில் 403 கடற்படை வீரர்கள் முழுமையாக குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வீடு திரும்பியுள்ளனர். 348 வீரர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்- என்றார். (எ)

# கேப்பாபிலவு முகாமில் 23 பேருக்கு கொரோனா

முல்லைத்தீவு, ஜூன் 1

கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் முகாமில் உள்ளோரில் இதுவரை 23 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. கேப்பாபிலவு விமானப் படைத்தளம் மற்றும் படையினரின் தனிமைப்படுத்தல் முகாம்களில் 400 வரையான கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் மாதிரிகள் கட்டம் கட்டமாக எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் முகாமில் உள்ள 23 பேருக்கு இதுவரை கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-19)

# தாக்குதல்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜூன் 1

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்றுள்ளன.

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த 43 வயது நபர், கெற்பேலியைச் சேர்ந்த 32 வயது நபர் மற்றும் கிளாலியைச் சேர்ந்த 26 வயது நபர் ஆகியோரே சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.(ஐ-9)



# விவசாயிகளுக்கு தரமான நிலக்கடலை விதைகள்

முல்லைத்தீவு, ஜூன் 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான விவசாயத் திட்டம் ஊடாக விவசாயிகளுக்கு தரமான நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் காலநிலைக்கு சீரமைவான விவசாயத் திட்டம் ஊடாக வழங்கப்பட்ட விதை நிலக்கடலைகள் தரம் இன்மை தொடர்பில் விவசாயிகள் ஊடகங்கள் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளனர்.

இது குறித்து பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறு தரம் இல்லாத நிலக்கடலையைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளில் நிலக்கடலையை பயிரிட்ட விவசாயிகளை தவிர்ந்த ஏனைய விவசாயிகளுக்கு தரமான நிலக்கடலை வழங்கப்பட்டது.

ஐயன்கன்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகியவற்றைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட விவசாயிகள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டதாக விவசாயத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஐ-19)

## பொதுத்தேர்தலுக்கு பின்னரே

# இ.தொ.காவுக்கு புதிய தலைவர் நியமனம்!

கொழும்பு, ஜூன்1

ஆறுமுகன் தொண்டமானின் மறைவையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னரே புதியவர் நியமிக்கப்படுவார் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. அதுவரையில் முடிவுகளை எடுப்பதற்காக ஐவரடங்கிய இடைக்கால நிர்வாகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இ.தொ.காவின் ஆலோசகர் முத்து சிவலிங்கம், பொதுச் செயலாளர் அனுஷியா சிவராஜா, சட்டத்தரணி மாரிமுத்து, உப தலைவர் செந்தில் தொண்டமான், நிதிச் செயலாளர் ரமேஷ் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் புதிய தலைவர் நியமிக்கப்பட்டால் அது கட்சிக்குள்ளும், தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாலேயே , தேர்தலின் பின்னர் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொண்டமான் குடும்பத்தில் இருந்தே ஒருவர் தலைமைப்பதவிக்கு வரவேண்டும் என டில்லியும், கொழும்பும் விரும்புவதால் அக்கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்படாது என்றும், பெரும்பாலும் ஜீவன் தொண்டமானே அடுத்த தலைவராக தெரிவாகக்கூடும் எனவும் அறியமுடிகின்றது. இதற்கிடையில் தலைமைத்துவத்துக்காகப் போட்டி நிலவுவதாகவும் தெரியவருகின்றது. (ப)

# ஹெரோய்னுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பால்பண்ணை பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் அதே இடத்தைச் சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர்களிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-20)

# வாகன விபத்தில் இராணுவ வீரர் சாவு

திருகோணமலை, ஜூன் 1

வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொரவெவ பிரதேசத்தில் இன்று இடம்பெற்றது. உயிரிழந்தவர் புலிகண்டிக்குளம், கோமரங்கடவல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் என மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஆறுமுகன் தொண்டமானுக்கு திருகோணமலையில் அஞ்சலி

திருகோணமலை, ஜூன் 1

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு திருகோணமலையில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலையில் உள்ள தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் காரியாலயத்தில் கட்சியின் திருகோணமலை நகரசபை உறுப்பினர் சத்தியன் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ஐ-40)



# விடுதிகளில் நிகழ்வுகளை நடத்த இன்றுமுதல் அனுமதி

கொழும்பு, ஜூன் 1

விடுதிகளில் திருமண நிகழ்வுகளை நடத்த இன்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று, சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், ஹோட்டல்களில் மூன்றில் ஒரு பங்குடையவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்குள் 1.5 மீற்றர் சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும் என்றும் அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மக்களுக்கு நிவாரணத்தை வழங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது எனவும், செயலாளர் சிறிபால ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

அந்தவகையில், ஹோட்டல் ஊழியர்கள், பயண நிறுவனங்கள், சுற்றுலா முகவர் மற்றும் சுற்றுலா வைச் சார்ந்த மற்றவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொரோனா எனப்படும் கொவிட் 19 தொற்றுப் பரவலையடுத்து நிகழ்வுகள் மற்றும் வைபவங்கள் அனைத்தும் சுமார் 2 மாதங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## ஊடகவியலாளர் நடேசனின் 16 ஆவது நினைவுதினம்

மட்டக்களப்பு, ஜூன் 1

படுகொலைசெய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 16 ஆவது நினைவுதினம் நேற்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் கடைப்பிடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-150)

## குழிக்குள் தவறி வீழ்ந்த சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 1

வீட்டின் கழிப்பறை குழியினுள் தவறி வீழ்ந்து 14 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தெல்கொட, உடுபில, இசிகிலிகந்த பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

வீட்டின் கழிப்பறைக் குழியின் மீது போட்டப்பட்டிருந்த கொங்றீட் தட்டில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், குறித்த கொங்றீட் தட்டின் மீது நின்றிருந்த சிறுமி தட்டு உடைபட்டு குழியினுள் வீழ்ந்துள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து, அவர் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியை ஆரம்பிப்பதற்கு மூன்று நிபந்தனைகளுக்கு பதில் இல்லை

### ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

ஐக்கிய மக்கள் சக்தியை ஸ்தாபிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், அங்கு முன்வைக்கப்பட்ட செயற்குழுவின் முழுமையான அனுமதி , கட்சித் தலைவரின் அனுமதி மற்றும் சின்னம் என்ற மூன்று நிபந்தனைகளுக்கு பதில் கிடைக்கவில்லை என்று ஐ.தே.கவின் உப தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வளவு காலம் ஏன் நீக்கப்படாமலிருந்தனர் என்றே முன்னர் வினவப்பட்டது. இதுவரை காலம் தொடர் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக உரிய நவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் போனது. தற்போது நாடு வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் செய்ய வேண்டியதை நாம் செய்துள்ளோம். ஆழமாகச் சிந்தித்து எதிர்காலம் பற்றி யோசித்தே நாம் செயற்படுகின்றோம். நாம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் 291 வேட்பாளர்களைக் களமிறக்கியிருக்கின்றோம். அந்த வேட்பாளர்களை மக்கள் மத்தியில் வெற்றியடையச் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போது வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டு அனைத்தும் நிறைவடைந்துள்ளன. ஏனைய கட்சிகளைப் போன்று வாக்களிக்கும் உரிமையை இல்லாமலாக்குவதற்கோ அல்லது காலம் தாழ்த்துவதற்கோ நாம் முன்வரவில்லை. எமக்கு வழங்கப்பட்ட உரிமையை வெற்றியடையச் செய்வதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம். தற்போதுள்ளவர்களே எமக்கு தங்கம் போன்றவர்கள். 99 இல் 44 பேர் மாத்திரமே நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். ஏனையோர் உள்ளூராட்சி உறுப்பினர்கள் , பிரதேசசபை உறுப்பினர்கள் போன்றோராவர். இந்த இரு மாத காலத்தில் இரு கட்சிகளும் செயற்படும் விதம் பற்றி மக்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள். மார்ச் மாதம் எடுக்கப்பட்ட தீர் மானத்தின் போது மூன்று நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

செயற்குழுவின் முழுமையான அனுமதி , கட்சித் தலைவரின் அனுமதி மற்றும் சின்னம் என்பன அவையாகும். இந்த மூன்று விடயங்க ளுக்கும் பதில் கிடைத்ததா ? சிலர் வெளியில் வந்து கருத்துக்களை கூறுகின்றார்கள் என்பதற்காக அதில் மாற்றம் இல்லை - என்றார். (ப)

## திரிபோஷா தொழிற்சாலை பூட்டு; 300 தொழிலாளர்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 1

ஜா எல பகுதியில் உள்ள திரிபோஷா தொழிற்சாலை மூடப்பட்டதால் அதில் பணியாற்றிய 300 தொழிலாளர்கள் கடந்த 3 வாரங்களாக வேலையிழந்து வீட்டில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த இரண்டு வாரங்களாக மக்காச் சோளம் இல்லாத காரணத்தால் திரிபோஷா உற்பத்தியும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து தொடர்பில் பிரச்சினை கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன என இலங்கை ஊட்டச்சத்து நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஜோர்தானிலுள்ள இலங்கையரின் நலன்களுக்கு அதிக முன்னுரிமை

### அதன் இலங்கைத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

ஜோர்தானில் கொவிட்-19 தொற்று நோயின் பரவல் குறித்து இலங்கைத் தூதரகம் தொடர்ந்தும் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதுடன், ஜோர்தானிலுள்ள இலங்கையர்களின் நலன்களை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது என்று அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

ஜோர்தானில் கொவிட்19 நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் தமது தொழில்களுக்குத் திரும்ப முடியாத ஏழை இலங்கைக் குடும்பங்களுக்கு உலர் உணவுகளை தூதரகம் தொடர்ந்தும் விநியோகித்து வருகின்றது. இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி உதவியின் மூலமாக ஜோர்தானிலுள்ள 576 இலங்கைக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேவைகள் மிகுந்த இலங்கையர்களுக்கு மேலதிகமான உலர் உணவுப் பொதிகளை சரியான நேரத்தில் விநியோகிப்பதில் பெருந்தன்மையுடன் ஈடுபட்ட இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, தம்கீன் மற்றும் கரிட்டாஸுக்கும் தூதரகம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது- என்றுள்ளது. (ப)

# வழமைக்குத் திரும்பியது திருநெல்வேலிச் சந்தை

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 70 நாள்களின் பின்னர், யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை இன்று வழமைக்குத் திரும்பியது.

கொரோனா வைரஸ் தாக்கத்தை நாட்டில் கட்டுப்படுத்தும் முகமாக நாடுமுழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொதுச்சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

கடந்த சில வாரங்களில் யாழ்ப்பாண மாவட்டம் படிப்படியாக வழமைக்குத் திரும்பியது. பொதுச் சந்தைகளும் திறக்கப்பட வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். வடக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலுக்கமைவாக யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள பொதுச் சந்தைகள் அனைத்தையும் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. அதன்படி 70 நாள்களின் பின்னர் இன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை மீள வழமைக்குத் திரும்பியது.

அதிகாலை 5 மணி முதல் சந்தை திறக்கப்பட்டு சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் சந்தை நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

நல்லூர் பிரதேச சபையினரால் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றக் கூடியவாறான ஏற்பாடுகள் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட நிலையில் இன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை வழமைக்கு திரும்பியது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதை கண்காணிக்கும் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டனர். திருநெல்வே லிச் சந்தை அமைந்துள்ள ஆடியபாதம் வீதி காலை 6 மணி தொடக்கம் 12 மணி வரை ஒரு வழிப் பாதையாக பயன்படுத்தப்பட்டது. (ஐ-111)



# மின்சார பாவனையாளர்களின் நலன்கருதி ஒன்லைன் வசதிகள்

கொழும்பு, ஜூன் 1

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார பாவனையாளர்களின் நலன்கருதி முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளவும், சேவையைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் ஒன்லைன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்மூலம் மின்சார பாவனையாளர்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு நேரடியாக வருகைதரவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறு ஆணைக்குழுவை இலகுவாக தொடர்புகொள்ளலாம் என்பது தொடர்பான ஊடக அறிக்கை ஒன்று ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:



இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பாவனையாளர்கள் மற்றும் பிற சேவை பயனாளர்களை ஒன்லைன் (இணைய சேவை) மூலமாக இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறது. ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் செல்லாமல் தங்கள் முறைப்பாடுகளைத் தீர்க்க மின்சாரப் பாவனையாளர்களுக்கு ஒன்லைன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதேனும் ஓர் அதிகாரியை சந்திப்பதற்கான அவசியம் காணப்படும் பட்சத்தில் அதற்கான தினத்தையும் நேரத்தையும் ஒதுக்கிக் கொள்வதற்கும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 0112392607 மற்றும் 0112392608 ஆகிய தொலைப்பேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும். இன்றேல் info@pucsl.gov.lk அல்லது www.facebook.com/pucsl என்ற முகநூல் பக்கத்தினூடாக தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம். உங்களது வேண்டுகோளுக்கு இணங்க பணியாற்றும் பிரிவினர் உங்களைச் சந்திப்பதற்கான நேரம் குறித்து விரைவில் அறியத்தருவர். இன்றேல் இணைய சேவை ஊடாக தொடர்புகொண்டு உங்களது பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு பெருநிறுவன தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயனாத் ஹேரத் 0772943193 அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. (ப)

# சங்கரத்தையில் வீடு கையளிப்பு

கொழும்பு, ஜூன்1

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்று இன்று பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார அலுவல்கள், புனர்வாழ்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், சுமார் 9 லட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதியில், இராணுவத்தினரின் சமூக சேவைகளில் ஒன்றாகிய வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், போரால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்திற்கு இந்த வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/159 சங்கரத்தை துணைவி கிராம ஆர்வலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், மற்றும் யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி ரூவான் வணிகசூரிய கையளித்தனர்.

513 பிரிகேட், 51 படைப்பிரிவில், பிரிகேடியர், லலித் ரத்நாயக்கவின் படிப்பின் கீழ் இராணுவத்தினரின் பங்களிப்பில் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த வீடு அமைப்பதற்கு பல நன்கொடையாளர்களும் தமது உதவிகளை வழங்கியிருந்தனர். இந்த நிகழ்வில், மேலதிக செயலர் ம.பிரதீபன், மாவட்ட உதவிச் செயலர் (காணி) எஸ்.முரளிதரன், இராணுவ உயர் அதிகாரிகள், சங்கானை பிரதேச செயலாளர் உட்பட வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம அலுவலர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-106)

# தந்தையின் கனவுகளை நிச்சயம் நிறைவேற்றுவேன்

## ஜீவன் தொண்டமான் உறுதி

கொழும்பு, ஜூன் 1



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அழியாது. தந்தையின் கனவுகளை நிச்சயம் நிறைவேற்றுவேன் என்று அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மகன் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நோர்வூட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற தந்தையின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்று நன்றியுரைஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் பிரச்சினையால் தகுதியான முறையில் இறுதி அஞ்சலியைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இவ்விடயம் கவலையளித்தாலும் நாட்டின் நலனும், பாதுகாப்பும் எமக்கு முக்கியம். அப்பா இருந்திருந்தால் அவரும் இதனையே நம்பியிருப்பார். எனவே, கொரோனா பிரச்சினை எல்லாம் முடிவடைந்ததும் நீங்கள் எல்லாம் எதிர்பார்க்கும் வகையில் ஒரு மாபெரும் நிகழ்வு கட்டாயம் நடத்தப்படும். மலையக அபிவிருத்தி சம்பந்தமாக எனது தந்தை கனவுகள் கண்டார். அந்தக் கனவுகளை நிறைவேற்ற எதிர்பார்த்திருக்கின்றோம். குறிப்பாக கல்விக்கு முன்னுரிமை வழங்கினார். மலையக பல்கலைக்கழகம் சம்பந்தமாக உயர்கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்தியிருந்தோம் அப்பா இறந்த நாளன்றுகூட ஆயிரம் ரூபா பற்றித்தான் கதைக்கப்பட்டது. 26 வயதில் என் தந்தையைப் பிரிவேன் என தெரிந்திருந்தால் நான் தூங்கியிருக்கவே மாட்டேன். எனக்கு செந்தமிழ் பேசவராது. இது பற்றி அப்பாவிடம் சொன்னேன்.

குடும்ப உறுப்பினருடன் பேசுவதுபோல் மக்களிடம் பேசு, ஏற்றுக்கொள்வார்கள் என்றார். இன்னும் கற்றுக் கொள்ளவேண்டி இருந்தது. அதற்குள் போய்விட்டார். எனது அனுபவம் பற்றி பலரும் கேள்வி எழுப்பினர். தந்தையிடம் கேட்டேன். முதுகில் குத்து வதற்குத் தான் அனுபவம் தேவை, சேவை செய்ய நல்ல மனம் இருந்தால் போதும் எனக் கூறினார். (ப)

# கொடுப்பனவைப் பெறத் தவறியோர் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்

## மன்.சமுர்த்தி அதிகாரி தெரிவிப்பு

மன்னார், ஜூன் 1

கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின் பொருட்டு தொழில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வழங்கப்படும், சமூக நலக் கொடுப்பனவுகளை எவராவது பெறுவதில் தவறியிருந்தால் அவர்கள் தங்கள் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பம் செய்து அக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என மன்னார் மாவட்ட சமுர்த்தி அதிகாரி ஐ.அலியார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின் பொருட்டு தொழில் பாதிப்புக்கான சமூக நலக் கொடுப்பனவாக முதலாம் கட்டமாக ஏப்ரல் மாதம் 32ஆயிரத்து 392 குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இதே குடும்பங்களுக்கு தற்பொழுது இரண்டாம் கட்டமாக மே மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த சனிக்கிழமை வரை 28ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு 140.5 மில்லியன் ரூபா கொடுப்பனவு இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

இன்னும் 4ஆயிரத்து 292 குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கின்றது. இவைகள் புதன்கிழமைக்குள் வழங்கப்பட்டுவிடும் இதற்கான நிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை தங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் முதலாம் கட்ட நிதி வழங்கப்பட்ட வேளையில் யாராவது ஊரடங்குச் சட்டம் காரணமாக இக் கொடுப்பனவைப் பெறமுடியாது விடுபட்டிருந்தால் இவர்களும் தங்கள் கிராம அலுவலர் ஊடாகப் பிரதேச செயலாளரிடம் விண்ணப்பம் செய்து இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (ப-60)

# சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் புதிய விண்ணப்பங்கள் நிறுத்தம்

## முன்னாள் எம்.பி லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

கடந்த அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக 45 இலட்சம் ரூபாய்க்கு அறிமுகப்படுத்தப்பட்ட சுரக்ஷா காப்பு றுதி பாதுகாப்புத் திட்டத்திற்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதை குறித்த காப்பீட்டு நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது அரசாங்கம் மேற்கொண்ட ஒப்பந்த காலம் நிறைவடைவதன் காரணமாக குறித்த நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், இது தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிப்பு ஒன்றை விடுக்கவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் என்.எச்.எம் சித்ரானந்த தெரிவித்தார். (ப)



# சமஷ்டியூடான அதிகாரப் பகிர்வே தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு

## ஈ.பி.ஆர்.எல்.எவ். வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 1

சிங்கள அரசுகளின் செயற்பாடு களினாலேயே தமிழ் மக்கள் தனி ஈழக் கோரிக்கையை முன் வைத்தார்கள் எனத் தெரிவித் துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழர் களின் பிரச்சினைகள் தீர்க்கப் பட வேண்டுமானால் சமஷ்டி தீர்வு ஊடாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது;

இலங்கையில் தனி நாட்டுக் கோரிக்கை 1976 ஆம் ஆண்டி லேயே வந்தது. இந்த தனி நாட்டுக் கோரிக்கை வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் ஊடாகவே பிரகடனம் செய் யப்பட்டது. வட்டுக்கோட் டைத் தீர்மானத்தை தந்தை செல்வநாயகமும் தமிழர் விடுத லைக் கூட்டணியுமே கொண்டு வந்தது. மாறாக தமிழீழ விடுத லைப் புலிகளோ அல்லது



ஆரம்பகாலத்தில் இருந்த ஏனைய போராட்ட இயக்கங் களோ கோரவில்லை.

அன்றைய காலத்தில் இருந்த சிங்கள அரசுகள் தமிழ் மக்க ளின் உரிமைகள் தொடர்பாக செய்துகொள்ளப்பட்ட பல உடன்படிக்கைகளை கிழித்தெ றிந்தன. குறிப்பாக டட்லி சேனநாயக்க உடன்படிக்கை, பண்டாரநாயக்க ஒப்பந்தம் என உடன்படிக்கைகளை அப்போது ஆட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசி யக் கட்சி என்பன கிழித்தெ றிந்தன. இலங்கைத் தமிழர்கள் மீது சிங்கள அரசு திட்டமிட்ட வகையில் பல நடவடிக்கை களை மேற்கொண்டது. அரச நிர்வாகத்தில் தனிச் சிங்கள மொழி மட்டுமே பின்பற்றப் பட்டது, பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவில் தமி ழர்கள் புறக்கணிக்கப் பட்ட னர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஊடாக சிங்கள மயமாக்கல் இடம் பெற்றது. அதன் ஊடாக தமிழர்களின் காணிகள் பறிக்கப்பட்டு அதில் சிங்கள வர்கள் குடியேற்றப்பட் டார் கள்.

இதனால் தமிழ் மக்களின் தனித்தன்மை கேள்விக்குறியாகி யது. அதனாலேயே ஈழத்தமி ழர்கள் தனி ஈழக்கோரிக்கையை முன்வைத்தார்கள். எனவே மாற வேண்டியது தமிழ் மக்களோ தமிழ் அரசியல்வாதிகளோ அல்லர் சிங்கள அரசியல்வாதிகளே.

இந்த நாட்டில் வாழும் ஏனைய மக்களைப் போன்று சமமாக வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும் குறிப்பாக மதம், மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றில் தனித்துவம் பேணப்பட வேண்டும். அதற்கு முதலில் இந்த நாட்டில் சமஷ்டி அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும்- என்றார். (ப-20)

# வெளிநாட்டில் உள்ளவர்களை அரசு கௌரவமாக அழைத்துவரவேண்டும்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

இலங்கை அரசு தனது கால தாமதமான செயற்பாட்டின் மூலம் செய்த பிழையை கடல் கடந்து சென்று நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெ லும்பாகச் செயற்படும் வெளி நாட்டு தொழிலாளர்கள் மீது சுமத்தி தப்பித்துக் கொள்ளாமல் அவர்களை உரிய முறையில் கௌரவமாக நாட்டுக்கு அழைத்து வர வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச் சர் அலி ஸாஹிர் மௌலானா கூறியுள்ளார்.

அண்மையில் அமைச்சர் ஒருவர், மத்திய கிழக்கு நாட் டில் இருந்து வந்தவர்களை வெடிகுண்டுகளாக வர்ணித் தமை தொடர்பில் தனது அதிருப்தியை சமூக வலைத்த ளங்கள் ஊடாக வெளிப்படுத்து கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து கடல் கடந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சென்று தாய் நாட்டுக்கும், தங்களது வீட்டுக்கும் தன்னலமற்ற முறையில் பொருளாதார பங்களிப்புக்களை வழங்குகின்ற தியாகிகளான நம்மவர்கள் உண்மையிலேயே உன்னதமான செயல் வீரர்கள். அந்நிய செலா வணியை எமக்கு வாரி வழங் கும் சத்தமில்லாத சாதனையா ளர்கள்.

அப்படிப்பட்டவர்கள் தங்களது அன்பான உறவுகளையும், தாய் நாட்டையும் விட்டுச்சென்று தியாகிகளாக பல தசாப்தங்க ளாக பல்வேறு கஷ்டங்களை யும் துயரங்களையும் தாங்கிக் கொண்டு அந்நியச் செலாவ ணியை வாரி வழங்கி தேசிய பொருளாதாரத்துக்குப் பல பங்களிப்புக்களை வழங்கி வரு கிறார்கள்.

இவ்வாறானவர்களை மிகவும் கரிசனையுடன் கொரோனா தொற்றுக்காவிகள் என்றும் வெடிகுண்டுகள் என்றும், எங்களை வந்து அழிக்கப் பார்க்கிறார்கள் என்றும் சொல் வதன் ஊடாக அரசின் காலதா மதமான நடவடிக்கையின் வெளிப்பாட்டினை மூடி மறைக்கப் பார்க்கிறார்கள். நாட்டின் முன்னேற்றத்துக்குக் காரணமான தியாகிகளான வெளிநாட்டுத் தொழிலாளிகள் மீது அவதூறு சொல்லி அவர் களை மலினப்படுத்துவது ஏற்க முடியாத அநாகரிகமான செயலாகும்- என்றார். (ப)

# ஊர்காவற்றுறை நூலகர் ஓய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஊர்காவற்றுறை பொது நூல கத்தில் நூலகராகக் கடமை யாற்றிய குமாரசாமி வைகுந்த வாசன் தனது 30 வருட சேவை யைப் பூர்த்திசெய்து கடந்த 20 ஆம் திகதி சேவையிலி ருந்து இளைப்பாறியுள்ளார்.

சாவகச்சேரி பொதுநூலகத்தில் சேவையை ஆரம்பித்து வலிகா மம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் பொது நூலகத்திலும் பின்னர் ஊர்காவற்றுறை பிர தேச சபையின் அனலைதீவு மற்றும் ஊர்காவற்றுறை பொது நூலகங்களிலும் சேவையாற் றியுள்ளார். இவருக்கு ஊர்கா வற்றுறை பிரதேச சபையின் ஊழியர் நலன்புரி சங்கத்தால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது. (க-9)

# அரச இணையத்தளங்கள் சேதப்படுத்தப்பட்டமை உறுதி

கொழும்பு, ஜூன் 1

இலங்கையில் சில அரச இணையத்த ளங்கள், செயற்பாட்டாளர்கள் குழுவினால் (activist) சேதப்படுத்தப்பட்டதை (defaced) இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு ஒருங்கிணைப்பு மையம் (Srilanka CERT | CC) உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வகையான செயற்பாட்டாளர்களின் இறுதி இலக்கு, பார்வையாளர்களின் கவ னத்தை ஈர்ப்பதும் வெறுப்பான செய்தி களைப் பரப்புவதுமாகும் என இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு ஒருங்கி ணைப்பு மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி லால் டயஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சி னால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:

இத்தகைய செயற்பாட்டாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல் இருப் பது அவசியமாகும். கடந்த காலங்களிலும் இதே போன்ற இணையத்தளத் தாக்குதல் கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வகையான தாக்குதல்களுக்கு ஈடுகொ டுக்கும் வகையில் இலங்கை கணினி அவசர தயார்நிலை அணி ஒருங்கிணைப்பு மையமானது செயலூக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஒரு செயலணியை யும் மற்றும் ஒரு செயற்குழுவையும் நிறுவி யுள்ளது. இச்செயற்குழுவில் இணையச் சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட முக்கிய அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு ஒருங்கி ணைப்பு மையம், பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகின் றது. இலங்கையின் தகவல் மற்றும் தகவல் அமைப்புகளின் உள்கட்டமைப்பைப் பாதுகாப்பதே இந்த அமைப்பின் முக்கிய பணியாகும். இணையத்தள செயலிழப்பா னது, தாக்குதல் நடத்துபவரினால் இணை யப்பக்கம் அல்லது இணையத்தளத்தின் காட்சி, தோற்றத்தை மாற்றுவதன் மூலம் நிகழ்த்தப்படுகின்றது. தற்போது ஏற்பட்ட இணையத்தளங்களை இழிவுபடுத்தும் இந்த முயற்சியில் தரவு மாற்றங்கள் எதுவும் ஏற்பட வில்லை. செயலணியினரால் தக்க தருணத் தில் பாதிப்புக்குள்ளான இணையத்தளங் களை அடையாளம் காணவும், நிலைமையை நிவர்த்தி செய்யவும் முடிந்தது.

இந்த இணையத்தள தாக்குதல்கள் காலை 6.38 மணிக்கு கண்டறியப்பட்ட அதே வேளை, காலை 7.30 மணியளவில் இலங்கை கணினி அவசர தயார்நிலை அணியில் உள்ள தகவல் பாதுகாப்பு பொறியாளர்களால் இணையத்தளங்கள் மீண்டும் சரிசெய்யப் பட்டன - என்றுள்ளது. (ப)

# காத்தான்குளத்தில் ஆயுர்வேத நிலையம்

மன்னார், ஜூன் 1

மாந்தை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காத்தான்குளம் கிராமத்தில் தனியார் பாரம்பரிய ஆயுர்வேத வைத்திய நிலையம் இன்று திங்கட்கிழமை திறக்கப்பட்டது.

வைத்திய நிலையத்தை மன்னார் மாவட்ட குருக்களின் முதல்வர் விக்டர் சோசை அடிகளார் திறந்தார். நிகழ்வில் மாந்தை பிரதேச சபை செயலாளர் மற்றும் பங்குத்தந்தையர் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர். (க-213)




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 01.06.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.